# DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.551/2019**

**PW-1**

**Date :-24.03.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு'சந்திரசேகர் | Caste | |
| த/பெ. | ராமசாமி | Calling | ஆவின் ஓய்வு |
| Village | நெ.1 டோல்கேட் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 70/2026 |

அரசு தரப்பு முதல் விசாரணை-

நான் தற்போது ஆவின் நிறுவனத்தில் உதவி பொது மேலாளராக பணி செய்து ஓய்வு பெற்று நெ .1 டோல்கேட்டில் வசித்து வருகிறேன் . கடந்த 06.08.2007 அன்று நானும் எனது மனைவி சித்ராவும் நாமக்கல் அருகில் உள்ள வரகூருக்கு சென்றுவிட்டு இரண்டு நாட்கள் கழித்து மாலை 6, 7 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது வீட்டின் தலைவாசல் கதவு திறந்து இருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது. ஹாலில் வைத்திருந்த இரும்பு டேபிளில் வைத்திருந்த 4 பவுண் எடையுள்ள தங்க நெக்லஸ் ஒன்றினையும், 24 கேரட் தங்க கட்டி சுமார் 3 ½ பவுண் எடையுள்ளதையும் ரொக்கம் ரூ .2,000/-த்தையும் காணவில்லை . அதனால் நாங்கள் தேடிபார்த்தும் அக்கம் பக்கம் விசாரித்தும் கிடைக்காததால் மறுநாள் காலையில் கொள்ளிடம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் . என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் . அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் ஆவணம் அ .சா.ஆ.1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. அதன்பிறகு 3 மாதங்கள் கழித்து காணமல் போன எங்களுடைய நகை கிடைத்துவிட்டதாக போலீசார் சொன்னதன் பேரில் காவல் நிலையம் சென்றேன். அங்கு இருந்த எனக்கு சொந்தமாக

4 பவுன் எடையுள்ள தங்க நெக்லஸ் ஒன்றினையும், 24 கேரட் தங்க கட்டி சுமார் 3 ½ பவுன் எடையுள்ளதையும் அடையாளம் காட்டினேன் . அதை திருடி சென்ற நபரின் பெயரை சொன்னார்கள் . அந்த நபரை நான் பார்க்கவில்லை. அதன்பிறகு நீதிமன்றத்தில் மனு செய்து எனக்கு சொந்தமான நகைகளை பெற்றுக்கொண்டேன்.

(ஆவணங்கள் குறியிடுசெய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

Sd/–xxxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.